1986 ஏப்ரல் 30]

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவர் அவர்களே, இதுவரை அதற்கான செலவுத் தொகை எவ்வளவு? இன்னும் எவ்வளவு தொகை செலவிடப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, இதுவரை மொத்தம் செலவிடப்பட்டிருக்கிற தொகை சுமார் நான்கரை கோடி ரூபாய். ஏழு கோடி ரூபாய்க்கு இதற்காக திட்டங்கள் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்றன.

Mortuary Vans.

* 230 *Q.*—Thiru A. MAYILSAMY : Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) the number of mortuary vans that were allotted to the Government General Hospital, Madras;

(*b*) the number of them in disrepair as on 2—4—1985 ;

(*c*) whether the Government are aware of the plight of poor people, consequent on the non-availability of mortuary vans; and

(*d*) if so, the steps taken by the Government thereon, to put them on road?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மூன்று.

(இ) ஒன்று மட்டும்.

(உ) ஆம்.

(எ) இரண்டு பிண ஊர்திகள் புதியதாக வாங்கப்பட்டன. அவை உபயோகத்தில் இருக்கின்றன.

திரு. அ. மயில்சாமி : தலைவர் அவர்களே, இந்த ஊர்திகள் மூன்று என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்ட அந்த நாளில் மூன்று ஊர்திகளும் பழுதடைந்து, அதனால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப் பழுதடைந்ததற்குக் காரணம் அவைகளை நீண்ட நாட்கள் பயன்படுத்தியதாலா அல்லது திடீரென்று பழுதடைந்தனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஏற்கெனவே டி.எம்.இசட். 6038, டி.எம்.பி. 9888, எம்.எஸ்.எஸ். 1154 ஆகிய வண்டிகள் பழுதடைந்த காரணத்தால் அவை பயன்படுத்தப்படாமல் இருந்தன. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், ஹெல்த் டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மெண்ட் என்ற துறைக்கு

டி.எம்.இச்ட் 6038 என்ற வண்டியை அனுப்பினோம். அது 'ரிகர்சல்' செய்யப் பட்ட பிறகு, அதை 'கண்டெம்' செய்ய வேண்டுமென்று சொன்னதால், புதிய ஊர்திகள் வாங்கியிருக்கிறோம். அதைப் பயன்படுத்தி வருகிறோம்.

திரு. அ. மயில்சாமி : தலைவர் அவர்களே, இந்த ஊர்திகள் நீண்ட நாட்கள் பயன்படுத்தப்பட்ட காரணத்தால்தான் பழுதடைந்தன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதன் காரணமாக, நான்கைந்து ஆண்டுகள் ஓடிய வண்டிகளைப் பொறுத்தவரையில், இந்த மருத்துவமனைகளுக்காவது, இத்தகைய வண்டிகளை மாற்றி புதிய வண்டிகளை வாங்கித்தர அரசு கருத்து வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இது நல்ல யோசனைதான். இந்தப் புதிய ஊர்திகள் வாங்க வேண்டுமென்று சொன்ன நேரத்தில், அப்படிப்பட்ட யோசனையைத்தான் நானும் சொல்லியிருக்கிறேன். அதுமட்டுமல்லாமல், நான்கு ஆம்புலன்ஸ் வேன்கள் புதியதாக வாங்கியிருக் கிறோம். டி.எம்.எக்ஸ். 7322, 7324, 7325, 7328 என்ற நான்கு வண்டிகளை வாங்கிக் கொடுத்திருக்கிறோம். அத்துடன் வேன்களும் மார்ச்சுவரி வேன் களும் வாங்கிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

Medical Courses.

* 231 *Q.*—Thiru C. RAMALINGAM (on behalf of Thiru K. SUBBU): Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether it is a fact that persons who have completed the M.B., B.S., course, have been made eligible to join the III year of the B.D.S., course ;

(*b*) if so, whether the B.D.S., Graduates have also been made eligible to join the III year of the M.B., B.S., Course ; and

(*c*) if not, the reasons therefor?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) எம்.பி., பி.எஸ்., பட்டம் பெற்றவர்கள் இரண்டாண்டு பி.டி.எஸ்., பட்டப் படிப்பு பெற பல் மருத்துவக் கழகம் விதிகள் ஏற்படுத்தி உள்ளது.

(இ) இல்லை.

(உ) இந்திய மருத்துவக் கழகம் மட்டுமே இது சம்பந்தமாக முடிவு எடுக்க இயலும்.